# பிறிஸ்பேன் தமிழ்ப்பாடசாலை இணை
## Brisbane Tamil School Inc.

PO Box 1041
Mt Ommaney QLD 4074

Email: admin@btsqld.org
Web: www.brisbanetamilschool.org

**Brisbane Campus**
Holland Park State High School
Bapaume Road, Holland Park

**Gold Coast Campus**
Southport State High School
Smith Street, Gold Coast

**Toowoomba Campus**
Darling Heights State School
Wuth Street, Darling Heights

**Brisbane Northside Campus**
Earnshaw State College, Cnr of
Earnshaw and Tufnell Rd, Banyo


பேச்சு - மேற்பிரிவு

*(01.07.2014க்குப் பின் பிறந்தவர்கள்)*

*Speech - Senior division (Born after 01.07.2014)*

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

**உண்மையால் உயர்வோம்**

***"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்."***

மனதில் பொய் இல்லாமல் நடக்கும் ஒருவன், எல்லோரின் மனதிலும் இடம் பெறுவான் என்பது இத்திருக்குறளின் பொருளாகும். உண்மை பேசுதல் வாழ்க்கையின் உயர்ந்ததொரு நற்பண்பாகும். பொய் சொல்லக் கூடாது பாப்பா என்று பாரதியார் சொல்கின்றார். ஒரு பொய்யைச் சொன்னால் அதனைக் காப்பாற்ற அடுக்கடுக்காகப் பொய் சொல்ல வேண்டி வரும்.

ஏன் உண்மை பேச வேண்டும்? நேர்மையாக நடப்பவரைச் சமூகத்தில் எல்லோரும் மதிக்கின்றார்கள். உண்மையைப் பேசுபவர் எதற்கும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. நேர்மையாக நடப்பவர்களில் நம்பிக்கை இருக்கும். அதனால் அன்பும் உறவும் என்றும் நிலைத்திருக்கும். சத்தியம் தவறாமை என்பது நல்வாழ்வுக்கும் நல்லுறவுக்குமான அடிப்படை எனலாம். வாழ்க்கையில் பல சோதனைகளைச் சந்தித்த போதும் அரிச்சந்திரன் உண்மை பேசினான். அதனால்தான் இன்று வரையில் சரித்திரமாக நிலைத்திருக்கின்றான்.

தவறு செய்தால், முதலில் அதை ஒத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் அதை எவ்வாறு சரி செய்வது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். தவறுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். தெரிந்தோ அல்லது தெரியாமலோ பிழைகளைச் செய்கின்றோம். அவற்றை ஏற்றுத் திருத்தி வாழப் பழகி விட்டால் நேர்வழியில் நடப்பது சாத்தியமாகும். சத்தியம் என்றும் தோற்றதில்லை.

உண்மையைப் பேசுவோம். உத்தமராய் வாழ்வோம்.

நன்றி